**CC 158/2009**
**Date 30.12.2022**
**PW : 9**
**பெயர் - திரு. மாரியப்பன்**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

புகார் மனுவை யார் எழுதினார் என்றால் எனக்கு தெரியாது. காவல்நிலையத்தில் கொடுத்த மெடிக்கல் நாமூனாவின் நகல் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படவில்லை என்றால் சரிதான். அசாஆ2ல் மெடிக்கல் மெமோ கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அசா1 எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றதாக ஆவணத்தில் துலங்குமா என்றால் இரவில் சென்றதாக துலங்கும். அசா2க்கு மட்டும் தான் காயம் ஏற்பட்டதாக ஆவணத்தில் துலங்குமா என்றால் அசா1 மற்றும் 2 க்கு ஏற்பட்டதாக துலங்கும்.

அசா1க்கு கல்லால் அடித்ததால் காயம் ஏற்பட்டதாக ஆவணத்தில் துலங்குமா என்றால் துலங்காது. மண்வெட்டி, கணையால் தாக்கியதாக காயம் ஏற்பட்டதாக அசா1,2,3விசாரணையில் தெரிவித்தார்களா என்றால் தெரிவித்தார்கள் ஆனால் புகார் மனுவில் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி அசா2ஐ 2 அடி அடித்ததாக துலங்குமா என்றால் அடித்ததாக உள்ளது 2 அடி அடித்ததாக இல்லை.

அசா1ற்கு இடது காலில் காயம்ஏற்பட்டதாக துலங்குமா என்றால் துலங்கும். அசா3ஐ பிடரியில் 1வது எதிரி அடித்ததாக ஆவணத்தில் துலங்குமா என்றால் துலங்காது அடித்து விரட்டியதாக உள்ளது. சம்பவத்தின்போது கை நொறுங்கிவிட்டதாக ஆவணத்தில் துலங்குமா என்றால் துலங்காது அடித்ததாக தான் உள்ளது. 1வது எதிரி முத்துராமலிங்கம் எதற்காக அசா1ஐ கூப்பிட்டார்கள் என்று ஆவணத்தில் துலங்காது என்றால் சரிதான்.

முத்துராமலிங்கத்தை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். புகார் மனுவை காவல்நிலையத்தில் கொடுக்கும்போது நான் காவல்நிலையத்தில் இல்லை. அசா1 தன்னை மண்வெட்டி, கணையால் தாக்கியதாக மருத்துவரிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அசா1 மருத்துவரிடம் தன்னை கல்லால் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். காயம்பட்டவருக்கு எடுத்த எக்ஸ்ரே ரிப்போர்ட், ஏஆர் காப்பி நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

சம்பவ இடத்தில் ட்ப்யூட் லைட் இருந்ததாக பார்வைமகஜரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் ஆனால் டார்ச் லைட் மூலம் வரைபடம் தயார் செய்யப்பட்டது. அசாஆ8 அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட பொருள்களின் விபரங்களில் நீளம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பயன்படுத்தப்பட்ட அருவாளின் வகை என்ன என்று குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி சாட்சி கையெப்பம் செய்யப்பட்டுள்ள மையும் மற்ற விபரங்கள் எழுதப்பட்ட மையும் வெவ்வேறு என்றால் சரிதான் மை காலியாகிவிட்டதால் வேறு பேனாவால் கையெழுத்து இடப்பட்டுள்ளது.

நான் எழுதாத வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கிவிட்டு காவல்நிலையத்தில் அத்தாட்சி தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 2வது எதிரிக்கும் அசா1க்கும் சொத்து சம்பந்தமாக முன்பகை இருந்தது என்றும் மேற்படி சொத்து சம்பந்தமாக 1வது எதிரிக்கு 2வது எதிரி ஆதரவாக இருந்தார் என்றும் அதனால் எதிரி மீது பொய்புகார் அளிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அசா1 முதல் 3 வரை இருசக்கர வாகனத்தில்

செல்லும்போது தன்னிச்சையாக ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் ஏற்படுத்தியதாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அசா1 முதல் 3க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்த தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் எழுதாத வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கிகொண்டு புகார் என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னாலும் சொன்ன நாள், இடம், விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.